TNVR230016902024

சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.

**முன்னிலை - திரு. M. சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,**

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் திங்கள்கிழமை

**O.S. No.798/2024**

**( CNR – TNVR230016902024)**

-------------

வை. சேகர் . . . . . வாதி

**//எதிர்//**

R. மாயக்கண்ணன் . . . . . பிரதிவாதி

இந்த வழக்கானது திருவில்லிபுத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.506/2022 ஆக கடந்த 14.10.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில், திருவில்லிப்புத்தூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, பின்னர் அதிகார வரம்பிற்குட்பட்டு இந்த வழக்கானது இராஜபாளையம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.798/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 01.06.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ..

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதி தொகை விபரத்தில் கண்ட தொகை ரூ.3,32,700/-யையும், அதில் அசல் தொகை ரூ.3,00,000/-க்கு வழக்குரை தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 12% வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை செலுத்தி முடிக்கும் காலம் வரை நீதிமன்ற தாரணைப்படியான வட்டியும் சேர்த்து செலுத்தி வைக்க உத்தரவிடக்கோரியும், தாவா வழக்கின் செலவு தொகைகளை பிரதிவாதி, வாதிக்கு செலுத்தி வைக்க உத்தரவிடக்கோரியும், மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதி வங்கியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்** :-

வாதியும், பிரதிவாதியும் நண்பர்கள் ஆவார்கள். வாதியிடம், பிரதிவாதி கடந்த 14.11.2021 ம் தேதி வாதியின் வீட்டில் வைத்து ரொக்கம் ரூ.3,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடன் தொகைக்கு மாதமொன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் வாதி வேண்டும் போது வாதியிடமோ, வாதியின் உத்தரவு பெற்றவரிடமோ திருப்பி செலுத்துவதாக உறுதி கூறி சாட்சிகள் முன்னிலையில் கடந்த 14.11.2021 ம் தேதியிலேயே வாதி பெயருக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறார்.

பிரதிவாதி மேற்படி 14.11.2021 ம் தேதிய பிராமிசரி நோட்டின்படியான கடன் தொகை ரூ.3,00,000/-க்கு வாதிக்கு செலுத்த வேண்டிய வட்டித்தொகையையோ, அசலையோ திருப்பி செலுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதியும், பிரதிவாதியை நேரடியாகவும், தனது வகையாட்கள் மூலமும் தொடர்பு கொண்டு 14.11.2021 ம் தேதிய கடனுக்குண்டான அசல் மற்றும் கூடிய வட்டிதொகைகளை திருப்பி செலுத்தி பிராமிசரி

நோட்டினை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு பிரதிவாதியிடம் கேட்டு வந்ததில் பிரதிவாதி விரைவில் அசலையும், வட்டியையும் வாதியிடம் திருப்பி செலுத்துவதாக கூறி கொண்டு எவ்வித தொகையும் செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்திருக்கிறார்.

பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்த முன்வராததால் பிரதிவாதியிடமிருந்து மேற்படி 14.11.2021ம் தேதிய பிராமிசரி நோட்டின்படியான கடன் தொகையையும் கூடிய வட்டியையும் வசூல் செய்ய வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்</u> :-

வாதிகளின் வழக்கு பொய்யானது, மோசடியானது, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. இவ்வழக்கில் இந்த பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை வாதிகளே நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார்கள்.

பிரதிவாதி தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில், வாதி வழக்குரை பத்தி எண்.4-ல் இந்த பிரதிவாதி வாதியிடம் கடந்த 14.11.2021-ம் தேதி வாதியின் வீட்டில் வைத்து ரொக்கம் ரூ.3,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி கடன்தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் வாதி வேண்டும்பொழுது வாதியிடமோ, வாதியின் உத்தரவு பெற்றவரிடமோ திருப்பி செலுத்துவதாக உறுதியளித்ததாகவும், ஷை தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி சாட்சிகள் முன்னிலையில் கடந்த 14.11.2021-ம் தேதி வாதியின் பெயருக்கு ஒரு பிராமசேரி நோட் எழுதி கொடுத்ததாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் சங்கதிகள் என்றும் மேற்படி சங்கதிகளை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும் இந்த பிரதிவாதி

சமர்ப்பித்துக் கொள்கிறார். உண்மையில் இந்த பிரதிவாதி வாதியிடம் எக்காலத்திலும், ஒருசிறு தொகையை கூட கடனாக பெற்றது கிடையாது. அதேபோல் கடந்த 14.11.2021-ம் தேதி வாதியிடம் இந்த பிரதிவாதி ரூ.3,00,000/-கடன் பெறவோ, அதற்கு வட்டி செலுத்த ஒப்புக்கொள்ளவும் இல்லை. மேற்படி தொகைக்கு ஆதரவாக கடந்த 14.11.2021ம் தேதி வாதியின் பெயருக்கு இந்த பிரதிவாதிக்கு பிராமசேரி நோட் எதுவும் எழுதிக்கொடுக்கவும் இல்லை.

பிரதிவாதி தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில், வாதி அவரது வழக்குரை பத்தி எண்.5-ல் பிரதிவாதி 14.11.2021-ம் தேதிய பிராமசேரி நோட்டின் படியான கடன் தொகை ரூ.3,00,000/-த்தையும் அதற்கு உண்டான வட்டியையும் செலுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதன் அசலையும் வட்டியையும் வாதியிடம் திருப்பி செலுத்தாமலும், பிராமசேரி நோட்டை வாபஸ் பெற்றுக்கொள்ளாமலும் இந்த பிரதவிாதி வீண் காலம் கடத்தி வந்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. அவைகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

உண்மையில் இந்த பிரதிவாதியின் தந்தை இராமசாமி, அவர் உயிருடன் இருந்த காலத்தில் இந்த வாதியின் தகப்பனார் வைரத்தின் உடன்பிறந்த சகோதரர் சித்திரைக்கனி, இராஜபாளையத்தை சேர்ந்த காளீஸ்வரன் மற்றும் சஞ்சீவிக்கனி ஆகியோர்களை நிர்வாகிகளாக கொண்ட இராஜபாளையம், சௌந்திரபாண்டியன் நகர், பூமாரியம்மான் கோவிலில் செயல்பட்டு வந்த காமராஜர் சிறுசேமிப்பு குழுவில் ரூ.1,00,000/-த்திற்கான 20 மாதங்கள் கட்டக்கூடிய ஏலசீட்டில் சேர்ந்து, அதனை கட்டி வந்தநிலையில், அவர் கடந்த 03.10.2019-ம் தேதி காலஞ்சென்றுவிட்டார். அவர் காலஞ்சென்றபின்னர் இந்த பிரதிவாதி,

அவரது தகப்பனார் இராமசாமிக்கு பதிலாக மேற்படி ஏலச்சீட்டில் சேர்ந்து மேற்படி ஏலச்சீட்டினை கட்டி வந்த நிலையில், மேற்படி ஏலச்சீட்டினை எடுத்துள்ளார். அவ்வாறு ஏலச்சீட்டினை எடுத்த காலக்கட்டத்தில் மேற்படி காமராஜர் சிறு சேமிப்பு குழுவில் அப்போதைய நிர்வாகிகளான காளீஸ்வரன், சஞ்சீவிக்கனி மற்றும் சித்திரைக்கனி ஆகியோர்கள் ஏலச்சீட்டினை இந்த பிரதிவாதி எடுத்த பணத்திற்கு நம்பிக்கையாக இந்த பிரதிவாதி கையெழுத்து மட்டும் இட்ட கடனுறுதி சீட்டினை காப்புறுதியாக கேட்கவே, இந்த பிரதிவாதியும் அதனை அவர்களிடம் கொடுத்துள்ளார். அதன்பின்னர் ஏலச்சீட்டின் மாத தவணைகளை மொத்த காலமான 20 மாதங்கள் இந்த பிரதிவாதி முறையாகவும் முழுமையாகவும் திரும்ப செலுத்தியுள்ளார்.

அதன்பின்னர் இந்த பிரதிவாதி மேற்படி காமராஜர் சிறுசேமிப்பு குழு நிர்வாகியிடம் காப்புறுதியாக கொடுத்த கடனுறுதி சீட்டினை திரும்ப கேட்டபோது, இந்த வாதியின் தகப்பனார் வைரத்தின் உடன்பிறந்த சகோதரர் சித்திரைக்கனி இந்த பிரதிவாதி கையெழுத்து இட்டு கொடுத்த சீட்டு அவர் கைவசமே உள்ளது என்றும், தற்போது அதனை வைத்த இடம் தெரியவில்லை என்றும், எனவே மேற்படி கடனுறுதி சீட்டு கிடைத்தவுடன் திரும்ப கொடுத்துவிடுவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் ஷை கடனுறுதி சீட்டினை ஷை சித்திரைக்கனி இந்த பிரதிவாதி வசம் ஒப்படைக்கவில்லை. சூழ்நிலைகளும் உண்மை சங்கதிகளும் அவ்வாறு இருக்க இந்த பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி காமராஜர் சிறுசேமிப்பு குழுவின் நிர்வாகிகளான காளீஸ்வரன், சஞ்சீவிக்கனி மற்றும் சித்திரைக்கனி ஆகியோர்களின் தூண்டுதலின்பேரில் சித்திரைக்கனியின் உடன்பிறந்த சகோதரரான வைரம் என்பவரின் மகனான இந்த வாதி

மூலம் இந்த பொய் வழக்கினை மேற்படி காமராஜர் சிறுசேமிப்பு குழுவின் நிர்வாகிகள் தாக்கல் செய்துள்ளார் என்பதை இந்த பிரதிவாதி சமர்ப்பித்துக் கொள்கிறார்.

பிரதிவாதி தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில், பிரதிவாதி வாதியிடம் இவ்வழக்கு தொகையை பெறாத காரணத்தால் இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் எதுவும் இல்லை. சொல்லியுள்ள வழக்குமூலமும் பொய்யானதும், தவறானதும் ஆகும்.

வாதியின் வழக்கிற்கு வழக்குமூலம் ஏதும் இல்லை. சொல்லியுள்ள வழக்குமூலமும் பொய்யானது என்று இந்த பிரதிவாதி சமர்ப்பித்துக்கொள்கிறார்.

இந்த பிரதிவாதி எதிர்காலத்தில் ஒரு கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்திட தனக்குள்ள உரிமையை இதன் மூலம் நிலைநிறுத்திக் கொள்கிறார்

எனவே, தாவா வழக்கை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the suit pronote is genuine one?
2. Whether the plaintiff is entitled for the relief of recovery of suit claim amount as prayed for?
3. To what other reliefs?

**5)** வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>எழுவினா 1, 2 க்கான தீர்வு :-</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், கடந்த 14.11.2021 அன்று பிரதிவாதி வாதியின் வீட்டில் வைத்து ரூ.3,00,000/- சாட்சிகள் முன்பாக கடன் பெற்று மேற்படி கடன் தொகைக்கு மாதம் 1 க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் அசல் மற்றும் வட்டியை திருப்பி செலுத்துவதாக அன்றைய தினமே வாதியின் பெயருக்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கடனுறுதி சீட்டின் படி அசல் மற்றும் வட்டி தொகையை பிரதிவாதிகள் செலுத்ததால் அசல் மற்றும் வட்டி தொகையை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, 14.11.2021 அன்று பிரதிவாதி சாட்சிகள் முன்பாக ரூ.3,00,000/-கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடன் தொகைக்கு ஈடாக அன்றைய தினமே சாட்சிகள் முன்பாக வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி கடனுறுதி சீட்டின் படி அசல் மற்றும் வட்டி தொகை செலுத்தவில்லை என்றும், பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பொறுத்து ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்றும், எனவே வாதி கோரியபடி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கவேண்டுமென்று வாதுரை செய்தார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, தாவா வழக்கு உண்மையானது அல்ல என்றும், பிரதிவாதியின் தந்தை ராமசாமி உயிருடன் இருந்த போது வாதியின் தகப்பனார் நடத்தி வந்த காமராஜர் சிறுசேமிப்பு குழுவின் மூலம் நடத்தப்பட்ட

ஏலச்சீட்டில் உறுப்பினராக சேர்ந்து 03.10.2019 அன்று இறந்துவிட்டார் என்றும், அதன் பின்பு பிரதிவாதி மேற்படி ஏலச்சீட்டு உறுப்பினராக இருந்து ஏலச்சீட்டு தொகை கட்டி ஏலச்சீட்டு எடுத்தபோது மேற்படி வாதியின் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர் மற்றும் பல நபர்கள் எடுத்த ஏல சீட்டு தொகைக்காக நம்பிக்கையாக கையெழுத்து மட்டுமிட்ட கடனுறதி சீட்டை காப்புறுதியாக கேட்டதன் பேரில் எழுதிக்கொடுத்துள்ளார். வாதி வழக்கில் கோரியுள்ள படி வாதி எவ்வித கடனுறுதி சீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், வாதி தன் வழக்கில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க தவறியுள்ளார் என்றும், எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதுரை செய்தார்.

ஆவணங்களை பரிசீலினை செய்ததில், கடந்த 14.11.2021 அன்று வாதியிடம், பிரதிவாதி வா.சா.2 சாட்சி முன்பாக ரூ.3,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு சாட்சியம் முன்பாக வா.சா.ஆ.1 கடனுறதி சீட்டு எழுதிக்கொடுத்ததன் பேரில் வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி கடனுறுதி சீட்டில் 2 வது சாட்சி கையெழுத்து செய்த கண்ணன் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.1, 2 சாட்சியத்தை பரிசீலினை செய்ததில், பிரதிவாதிக்கு ஆதரவாக எந்த அம்சங்களும் குறுக்குவிசாரணையில் காணப்படவில்லை. வாதி வா.சா.1, 2 சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 கடனுறதி சீட்டின் மூலமாக வாதி வழக்கை நிரூபித்துள்ளார் என்பது தெரியவருகிறது. பிரதிவாதி தனது சாட்சியத்தில் வா.சா.ஆ.1 கடனுறதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்தில் காமராஜர் சிறுசேமிப்பு குழுவில் ஏல சீட்டு உறுப்பினராக இருந்ததாகவும், அதற்காக எடுக்கப்பட்ட தொகைக்காக கடனுறதி சீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடும் சங்கதிக்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும், சாட்சியங்களும் பிரதிவாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் " என் தகப்பனார் உறுப்பினராக இருந்த சீட்டில் நான் தொடர்ந்து பணம் செலுத்தி வந்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் எத்தனையாவது சீட்டை எடுத்தேன் என்றும், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை " என்றும்,

" வா.சா.ஆ-1யை காமராஜர் சிறுசேமிப்பு குழுவிற்கு தான் வழங்கினேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் " என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது கையொப்பம் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் வாதி வா.சா.1, 2 சாட்சியத்திலிருந்தும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிலிருந்தும் வாதி வழக்கை நிரூபித்துள்ளார் என்று தெரியவருகிறது. பிரதிவாதியும் தனது குறுக்குவிசாரணையில் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் வாதி இந்த வழக்கை தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும், பிரதிவாதி தரப்பில் வாதியின் வழக்கை

பொய்பிக்கும் வகையில் ஆவணங்களோ, சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் மேற்படி வா.சா.ஆ.1 கடனுறதி சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல மறுக்கப்படவில்லை.

7) மேலும், வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்ததைப் பொறுத்தும் அதிலுள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது தான் என்பதைப் பொறுத்தும் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டு உள்ளதால் மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 118-ன் கீழ் வாதிக்கு சாதகமாக சட்டப்படியாக எழும் அனுமானங்கள் இந்த வழக்கிலும் எழுகிறது. இத்தருணத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் கீழ்க்கண்ட தீர்ப்பு கவனத்தில் எடுத்துக் கொள்ளபடுகிறது.

Madras High Court
K. Sivalingam /Vs/ S.T. Murugan on 18th March 2021

"Once the presumption under Section 118 is drawn and in view of Section 20 of the NI Act, it is for the defendant to dislodge the said presumption and prove that the promissory note was not supported by consideration. The Plaintiff had apart from examining himself, examined one of the attestors of the promissory note as PW1 and proved execution. The defendant has miserably failed to produce evidentiary support to his pleadings. (Para9)"

8) மேற்படி முன் தீர்ப்புரை இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது. இந்த வழக்கிலும் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118-ன் கீழ் உள்ள அனுமானம் வாதிக்கு சாதகமாக எழுகிறது. வா.சா.1ன் சாட்சியம் பிரதிவாதி தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை. ஆகவே மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 118 ன் கீழ் வாதிக்கு சாதகமாக எழும் அனுமானங்களை மறுத்தளிக்க பிரதிவாதி தவறிவிட்டார் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. ஆகவே

மேற்கண்ட சங்கதிகளின் அடிப்படையில் வாதி அவருடைய வழக்கை நிரூபித்துள்ளார். ஆகவே இந்த எழுவினாக்கள் 1, 2 வாதிக்கு சாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**9) <u>எழுவினா 3 க்கான தீர்வு</u>**

எழுவினா 1. 2 வாதிக்கு ஆதரவாக விடை காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினாவிற்கு விடை காணப்படுகிறது.

**10) முடிவில்**,

1) வழக்கு செலவுதொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) வாதிக்கு, பிரதிவாதி ரூ.3,32,700/-ம், அதில் அசல் தொகை ரூ.3,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ
Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

**<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>** :-

வா.சா.1 - வை. சேகர்

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>** :-

வா.சா.ஆ.1 - 14.11.2021 வாதிக்கு பிரதிவாதி ரூ.3,00,000/-க்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டு அசல்

**<u>பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>**:-

பி.வா.சா.1 - R. மாயக்கண்ணன்

**<u>பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>**:-

பி.வா.சா.ஆ.1 - வா.சா.1 ன் ஆதார் அடையாள அட்டை ஒப்பீட்டு நகல்

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.